அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# அருள்ஜோதி

APRIL 2020 ARUL JOTHI சன்மார்க்க மாத இதழ் விலை ரூ.10/-





# ஆசிரியர் பக்கம்

நமது அன்ன ஆலய அருட்தொண்டில் ஈடுபட்டுள்ள அருளாளர்களுக்கு வள்ளலாரின் அருட்கருத்துகளை தெரியப்படுத்தும் விதமாக, தொண்டார்வலர் ஒருவரின் இல்லத்தில் அப்பகுதியில் உள்ள நமது தொண்டார்வ அருளார்களை ஒன்று சேர்த்து, வள்ளற் பெருமானார் 1872, ஏப்ரல் 18-ம் தேதி ஒரே இரவில் எவ்வித அடித்தல் திருத்தலின்றி நமது திருக்கரத்தால் எழுதிய 1596- வரிகளை கொண்ட தமிழ் நூல்களியே நீண்ட அகவற்பா எனப் புகழ்பெற்ற "அருட்பெருஞ் ஜோதி அகவல்" பாராயணம் செய்யும் அருள் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்றது வருகிறன்றன.

இம் மாதம் (ஏப்ரல்) 10-ந்தேதி நமது நிறுவனர் தவத்திரு.சதீஷ்ராஜ் அடிகளாரின் நினைவு நாளில் ’அன்ன நிறைவகம்’ தொடக்க நிகழ்ச்சி திருவருளால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட அன்ன நிறைவகம் அமைப்பது என்பது நமது நிறுவனரின் தயவு விருப்பம் ஆகும். அந்த விருப்பம் நிறைவேற இருப்பது நமது தொண்டார்வல அருளாளர்களின் தயவினால் தான் என்பது இங்கு குறிப்பிட பட வேண்டியதாகும். ஆகவே அன்ன நிறைவகம் தொடக்க விழாவில் அனைத்து அருளார்களும் கலந்து கொண்டு விழாவினை சிறபிக்க வேண்டுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

**அகவல் பாராயணமும் 9.00 மணி முதல்**
**உலகெலாம் ஜீவகாருண்ய சேவை நடைபெற வேண்டி**
**பிரார்த்தனை நிகழ்வு நடைபெறும்.**

# செய்யக்கூடாத பாவங்கள் எவை தெரியுமா ?



இராமலிங்க அடிகளார் அவர்கள், திருஅருட்பிரகாச வள்ளலார் என்னும் புனைப்பெயரை கொண்டவர் ஆவார். சமரச சன்மார்க்க நெறியை வழங்கியவர் இவரே. இவர் அனைத்து மத நல்லிணக்கத்திற்காக 'சன்மார்க்க சங்கத்தையும்', பசியின் துயர் போக்கி மக்களுக்கு உணவளிக்க 'அறச்சாலையையும்' அமைத்தவர். அறிவு நெறி விளங்க 'ஞான சபையையும்' நிறுவியவர்.

வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடிய கருணை மனம் இவருடையது. வடலூர் சத்திய தருமச்சாலையில் பசியால் வாடும் மக்களுக்கு பசியாற்றிட இவர் அன்று மூட்டிய அடுப்பு இன்னும் அணையாமல் தொடர்ந்து மக்களின் பசிப்பிணியை தீர்த்து வருகின்றது. பசித்தவர்களுக்கு சாதி, மதம், இனம், மொழி முதலிய வேறுபாடு கருதாது உணவளிக்கவே இந்த தருமசாலை தொடங்கப்பட்டது. இவர் ஒரு மகா ஞானி ஆவார். இவரால் எழுதப்பட்ட 'மனு முறை கண்ட வாசகத்தில்' குழந்தைகளுக்கு நல்ல போதனையை கூறியுள்ளார்.

வள்ளலார் கூறிய 42 வகையான பாவங்கள் பின்வருமாறு:–

1. நல்லவர் மனத்தை நடுங்க வைப்பது.
2. வலிய வழக்கிட்டு மானம் கெடுப்பவர்கள்.
3. தானம் கொடுப்போரைத் தடுத்து நிற்பது.
4. கலந்த சினேகிதருள் கழகம் உண்டாக்குவது.
5. மனமொத்த நட்புக்கு வஞ்சகம் செய்வது.
6. குடிமக்களிடம் வரி உயர்த்திக் கொள்ளையடிப்பது.
7. ஏழைகள் வயிறு எரியச் செய்வது.
8. தருமம் பாராது தண்டிப்பது.
9. ஒருதலைச் சார்பாக வழக்கு வைப்பது.
10. உயிர்க் கொலை செய்பவர்க்கு உபகாரம் செய்வது.
11. களவு செய்பவர்க்கு உளவுகள் சொல்வது.
12. பொருளை இச்சித்துப் பொய் சொல்வது.
13. ஆசை காட்டி மோசம் செய்வது.
14. போக்குவரவு கூடிய வழியை அடைப்பது.
15. வேலையை வாங்கிக்கொண்டு குறைப்பது.
16. பசித்தோர் முகத்தைப் பாராமல் இருப்பது.
17. இரப்பவர்க்கு பிச்சை இல்லை என்பது.
18. கோள் சொல்லி குடும்பத்தை குலைப்பது.
19. நட்டாற்றில் கையை நழுவது.
20. கலங்கி ஒளிந்தவரை காட்டிக் கொடுப்பது.
21. கற்பிழந்தவளோடு கலந்துறைவது.
22. காவல் கொண்ட கன்னியை கற்பழிப்பது.
23. கணவன் வழி நிற்பவளை கற்பழிப்பது.
24. கருவைக் கலைப்பது.
25. குருவை வணங்கக் கூசி நிற்பது.
26. குருவின் காணிக்கை கொடுக்க மறுப்பது.
27. கற்றவர் தம்மிடம் கடுப்போடு நடப்பது.
28. பட்சியை கூண்டில் பதைக்க அடைப்பது.
29. கன்றுக்குப் பால் ஊட்டாமல் கட்டி அடைப்பது.
30. மாமிசம் உண்டு உடல் வளர்ப்பது.
31. கல்லும் நெல்லும் கலந்து விற்பது.
32. அன்புடையவர்க்குத் துன்பம் செய்வது.
33. குடிக்கின்ற நீருள்ள குளத்தை அழிப்பது.
34. வெயிலுக்கு ஒதுங்கும் விருட்சத்தை அழிப்பது.
35. பகை கொண்டு அயலவர் பயிர் அழிப்பது.
36. பொது மண்டபத்தை இடிப்பது.
37. ஆலயக் கதவை அடைத்து வைப்பது.
38. சிவனடியாரைச் சீறி வைவது.
39. தவம் செய்வோரைத் தாழ்வு சொல்வது.
40. சுத்த ஞானிகளைத் தூஷணம் செய்வது.
41. தந்தைதாய் அறிவுரைகளை தள்ளி நடப்பது.
42. தெய்வத்தை இகழ்ந்து செருக்கு அடைவது.

# அருட்பெருஞ்ஜோதி அகவல் விளக்கம்

சென்ற மாத தொடர்ச்சி...

**இம்மையும் மறுமையும் இயம்பிடும் ஒருமையும்**
**எம்மையும் நிரம்பிடும் என்தனி இன்பே 1250**

இவ்வுலக வாழ்வு, மேலுலக வாழ்வு இரண்டிலும், இறை உண்மை கண்டு ஒன்றி அதுவேயாகி நிற்கும் போதும், மேலாகிய பிறவாப் பெருவாழ்வு நிலை எனக் கூறப்படும் இடங்கள் யாவற்றிலும், நிறைந்து விளங்குவது ஒப்பற்ற பரசிவம்.

**முத்தர்கள் சித்தர்கள் சத்திகள் சத்தர்கள்**
**எத்திறத்து அவர்க்கும் ஆம் என்தனி இன்பே 1252**

வீடு பேற்றுக்குரியோர்,சித்திநிலைபெற்றவர்கள், பெண் தெய்வங்கள் (செயல்களை நிகழ்த்தும் சத்திகள்), சத்தி உடையவர்கள் (செயலுக்குக் காரணர்கள்) ஆதிய எத்தகைய பெருமக்களுக்கும் தலைமையானது ஒப்பற்ற இயல்பினதாகிய பரசிவம்,

**எல்லா நிலைகளின் எல்லா உயிர்உறும்**
**எல்லா இன்புமாம் என்தனி இன்பே 1254**

அசையும் அசையா மற்றும் இவற்றில் அடங்காத பிற உயர்ந்த தாழ்ந்த உயிரினங்கள்: கீழ், நடு, மேல் என்னும் நிலை வகைகள், உலகங்கள் எல்லாவற்றிலும் வாழும் உயிர் வகைகள் அனைத்தும் பெறும் இன்பங்கள் யாவுமாக விளங்குவது ஒப்பற்ற தனிமுதலாகிய சிவமே ஆகும்.



## அருள் அமுதம்

**கரும்புறு சாறும் கனிந்தமுக் கனியின்**
**விரும்புறும் இரதமும் மிக்கதீம் பாலும் 1256**

பக்குவமாக முற்றிய கரும்பிலிருந்து பிழிந்து பெறும் சாற்றையும், நன்கு பழுத்த மா, பலா, வாழை ஆகிய முக்கனிகளின் விருப்பம் தரும் பிழிவையும் விட மிகுந்த இனிமைச் சுவையுடைய பாலையும்,

**குணங்கொள்கோல் தேனும் கூட்டி ஒன்று ஆக்கி**
**மணம்கொளப் பதம்செய் வகையுற இயற்றிய 1256**

உயர்ந்த தன்மை கொண்ட கெடாத சுவைமிக்க கொம்புத் தேனையும், மேல கூறியவைகளுடன் ஒன்றாகக் கலந்து நல்ல மணம் உண்டாகும்படி புதியதாகப் பக்குவமான முறையில் காய்ச்சி

(சூடுபடுத்தி, பாகுபோன செய்தமைத்து,

**உணவெனப் பல்கால் உரைக்கினும் நிகரா**
**வணம்உறும் இன்ப மயமே அதுவாய்க் 1260**

உண்ணுவதற்கு ஏற்றதாக அமைந்த பக்குவமான உணவு எனப்பலரும் அறிந்து கூறப்படும் சிறப்பு உள்ளதானாலும், அதற்கும் ஒப்பாகாதவாறு மிகச் சிறந்த இன்ப மயமாய் (சிவானந்தம்) விளங்குவதாய்,

**கலந்து அறிவு உருவாய்க் கருதுதற்கு அரிதாய்**
**நலம்தரும் விளக்கமும் நவிலரும் தன்மையும் 1262**

என்னுடைய உணர்வுடன் பிறிவின்றிக் கலந்து அறிவுருவாகவும், உயிர் உணர்வால் நினைப்பதற்கு அரிதாகவும், நன்மைதரும் பேரொளியாகவும், நாவால் சொல்ல முடியாத குளிர்ச்சி தரும் இன்பம் உடையதாகவும்,

**உள்ளதாய் என்றும் உள்ளதாய் என்னுள்**
**உள்ளதாய் என்தன் உயிர்உளம் உடம்புடன் 1264**

எக்காலத்தும் அழிவற்று உள்ள நிலைத்த பொருளாகவும், என்றென்றும் விளங்குவதாயும், என் உள்ளத்தின் உள்ளே உணர்வுமயமாகி உள்ளதாகவும் என்னுடைய உயிரும் உள்ளமும் உடம்பும்,

**எல்லாம் இனிப்ப இயல்உறு சுவை அளித்து**
**எல்லாம் வல்லசித்து இயற்கைய தாகிச் 1266**

யாவும் இனிக்குமாறு அமையும் சுவை மிகத்தந்து, எல்லாம் செய்ய வல்ல இயற்கை சித்தாகவும்,இயல்பாகஇயங்கும் தன்மையதாகவும் விளங்குவது சிவம்.

**சாகா வரமும் தனித்தபேர் அறிவும்**
**மாகா தலிற்சிவ வல்லப சத்தியும் 1268**

சிவத்தின் இயற்கை இன்ப வாழ்வில் என்றும் விளங்கும் இறவாத பெருநிலையையும், கல்லாதே தனித்து உணரும் ஒப்பற்ற பேரறிவும், பேரன்புருவாக விளங்கும் சிவத்தின் வரம்பிலா ஆற்றலை நல்கும் சக்தியும்,

*செயற்கு அரும் அனந்த சித்தியும் இன்பமும்*
*மயக்கறத் தரும்திறல் வண்மைய தாகிப் 1270*

செய்தற்கரியவற்றைச் செய்யும் எல்லையற்ற சித்திகளும், அதனால் பெறும் இன்பமும், கலக்கமின்றி விரும்புவன தந்தருளும் ஆற்றலும், குறையாது கொடுக்கும் வள்ளல் குணமும் உடையது சிவம்.

## வள்ளலார் பொன்மொழிகள்

* சினம், சோம்பல், பொய், பொறாமை, கடுஞ்சொல் முதலியவைகளை அறவே நீக்க வேண்டும்.

* அன்பும் இரக்கமுமே வாழ்க்கையின் அடிப்படை. உண்மையைச் சொல், அது உனது வார்த்தைகளைப் பாதுகாக்கும்.

* யாரிடத்தில் தயவு அதிகம் இருக்கிறதோ அவரிடத்தில் கடவுள் இருக்கிறார்.

* எனக்குச் சித்திகள் எல்லாம் தருகின்ற தெய்வமாக விளங்குவது சத்தியமே.

* எல்லா உயிர்களையும் தம் உயிர்போல் பாவித்து சம உரிமை வழங்குவோரின் மனதில்தான் இறைவன் வாழ்கிறான்.

* ஏதும் இல்லாத ஏழைகளுக்கு இரக்கப்பட்டு மனது உவந்து ஈவதே ஜீவகாருண்யம்.

* வாக்கு வேறு, மனம் வேறு, செய்கை வேறு என்கிற நிலையில் இறைவனை வழிபடாதீர்கள். மூன்றும் ஒன்றிய நிலையில் வழிபடுங்கள்.

# அருட்பெருஞ்ஜோதி அட்டகம்

(விளக்க உரை)



**அறிமுகம்:**

சன்மார்க்க அன்பர்கள் அருட்பெருஞ் ஜோதி அகவலை

ஓதும்போது, அதனுடன் அருட்பெருஞ் ஜோதி அட்டகத்தையும் சேர்த்து ஓதுவது ஒரு வழக்கமாயிருக்கிறது.

அட்டகம் என்றால் சூக்கும உடம்பு, அதாவது உள் உடம்பு என்று பொருள். இது நமது உடம்பின் இரண்டாவது பகுதியைக் குறிக்கும்.

நமது உடம்பு மூன்று பகுதிகளை உடையது. நம் கண்ணால் பார்க்கும் உடம்பும், அதில் இயங்கிக் கொண்டிருக்கும் மூச்சும் சேர்ந்தது தூல உடம்பு. இது முதல் பகுதி.

நமது உணர்வும், அறிவும் சேர்ந்தது சூக்கும உடம்பு. இது நமது உடம்பின் இரண்டாவது பகுதி.

இந்த இரண்டு உடற் பகுதிகளுக்கும் காரணமாக இருப்பது காரண உடம்பு.

இது நம் உடம்பின் மூன்றாவது பகுதி.

இந்த மூன்று உடல் பகுதிகளிலும் ஐம்பூதங்களின் முதல் பூதமான ஆகாச பூதம் நிரம்பியிருக்கிறது. ஆகாசமோ அகர எழுத்தால் குறிக்கப்படுகிறது.

நம் தேகத்தின் மூன்று பாகத்திலும் இந்த ஆகாசம் பரவி இருக்கிறது. அது அந்தந்த பாகத்திலும் தூலமாகவும் சூக்குமமாகவும், காரணமாகவும் மறைந்தும் மறையாமலும் விளங்கிக் கொண்டு இருக்கிறது.

தூல வாழ்வின் மூலம்தான் நமக்கு அனுபவங்களும் வருகின்றன. ஆகையால் இந்தத் தூல உடம்பில் காணும் ஆகாசத்திற்கு ஒரு குறிப்பிட்ட அளவு கூறப்பட்டிருக்கிறது.

ஆகாசத்தின் நிலை கணிதத்திற்குள் வைத்து அளவிட..... முடியாத பெரிய நிலை. ஆகாயத்தின் ஒரு பகுதிதான் மனித உடல். இந்த மனித உடலை 'சிற்பிரபஞ்சம் அதாவது அறிவு உலகம்' என்று சொல்வார்கள். மனித உடல் ஓங்கார வடிவத்தின் முழுத்தன்மையையும் பெற்றது. இதன் தூல வடிவம் எண்சாண் அளவுடன் திகழ்வது.

. தமிழில் எட்டு என்ற எண்ணை 'அ' என்ற எழுத்தால் எழுதுவார்கள். 'அ' என்ற எழுத்து எட்டு என்ற எண்ணைக் குறிப்பது போல, ஆகாயம் என்ற பொருளையும் குறிக்கும்.)

'எறும்பும் தன்கையால் எண் சாண்' என்பது பழமொழி. எறும்பாக இருந்தாலும் சரி, மற்ற எந்த உயிராக இருந்தாலும் சரி. அதன் கையால் எண் சாண் அளவே அதன் உடல் இருக்கும். எறும்பும் தன் கையால் எண் சாண் என்ற பழமொழியில் வரும் 'கை' என்பதற்கு அனுபவம் என்றும் பொருள் உண்டு.

எந்த உயிரின் உடலும் எட்டின் அகமாக விளங்கும் ஆகாயத்தின் வடிவமே ஆகும் என்பது அனுபவம். இங்கு ஆகாயம் என்பது அருள் ஒளியைக் குறிக்கும்.

'அ' என்ற எழுத்து மற்ற எழுத்துக்களிலும் கலந்து இருக்கிறது. இதுபோல ஆகாயம் என்ற பூதமும் மற்ற பூதங்களில் கலந்து இருக்கிறது.

அட்ட' என்பது 'அஷ்ட' என்ற வடமொழிச் சொல்லின் தமிழ் வடிவம். 'அட்ட' 'அஷ்ட' என்பதற்கு வடமொழியில் எட்டு என்று பொருள். அட்டஅகம்அட்டகம்.

நமது உடல் அட்டமூர்த்தங்களால் ஆனது. பஞ்ச பூதங்களுடன் சூரியன், சந்திரன், ஆன்மா




, அதாவது இறைவனைத் தன் உள் பெற்ற உயிர் ஆகிய இந்த எட்டின் அகமாக விளங்குகிற ஆகாயம் அட்டகம்.

நம் சூக்கும தேக அனுபல நிலையை உணர்த்த வந்தது அருட்பெருஞ்ஜோதி அட்டகம். இது எட்டு செய்யுள்களை உடையது. இதில் முதல் நான்கு பாடல்களும் சத்விசாரத்தால் பெறப்படும் உண்மையை விளக்குவன.

அடுத்த நான்கு பாடல்களும் பரோபகாரச் செயல் அனுபவத்தால் அடையப் பெறும் நிலையை விளக்கி விவரிப்பன

## செய்யுள் விளக்கம்

**அருட்பெரு வெளியில்அருட்பரு உலகத்து**
**அருட்பெரு தலத்துமேல் நிலையில்**
**அருட்பெரும் பீடத்து அருட்பெரு வடிவில்**
**அருட்பெரும் தீருவிலே அமர்ந்த**
**அருட்பெரும் பதியே! அருட்பெரு நிதியே**
**அருட்பெரும் சித்தின்அமுதே!**
**அருட்பெருங்களிப்பே! அருட்பெரும்முகமே!**
**அருட்பெருஞ் ஜோதிஎன் அரசே!**

அருட்பெரும்ஜோதி ஆண்டவர்அருட்பெருஞ் ஜோதி ஆண்டவர் திருவடி சூட்டி திருமுடி காட்டி நம்மை தம் பெருங்கருணையால் ஆட்கொள்கிறார்.

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் திருவடிப் பெருமையைத் திருவடிப் புகழ்ச்சியிலும், திருமுடி. உயர்வை அருட்பெருஞ் ஜோதி அகவலிலும் அறிந்து இன்பறுகிறோம்; தெளிவு பெறுகிறோம்.

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை அருள் அம்பலத்து அரசராகக் கொண்டு அவரை முன்னிலைப் படுத்தித் துதிக்கப் பெறுகிறது இவ் அட்டகப் பாடல்.

இந்தப் பாடலின் கடைசி அடியில் தான் அருட்பெருஞ்ஜோதி என் அரசே!" என்று வள்ளலார் அழைக்கிறார்.

அருட்பெரு வெளியை நம் உள்ளத்தில் அருள் உணர்வோடு அறியத் தொடங்கும் போது அருட்பெரு வெளிக்கு எல்லையே இல்லை என்பதை உணர முடிகிறது. வார்த்தைகளால் இதைச் சொல்லிக் காட்டவும் முடிவ தில்லை .

நம் தலையின் மத்தியப் பகுதிதான் அருட்பெரும் தலம். அதில் இருக்கிறது அருட்பெரும் ஞானபீடம்

அந்த ஞான பீடத்தில் அருட்பெரும் வடிவத்துடனும் அருட்பெரும் விளக்கத்துடனும் வீற்றிருந்து அருளுகிறார் அருட்பெருஞ் ஜோதிக்கடவுள்

அவர் அருட்பெரும் நிதியாகவும், அருட்பெரும் சித்தியைத் தருகிற அமுதமாகவும், அருட்பெரும் இன்பமாகவும், நிலைத்த சுகம் தரும் பெருவாழ்வாகவும் விளங்குகிறார். அவரே எல்லாப் பொருள்களுக்கும் அரசராக விளங்கும் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர்.

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் சந்நிதியில் இருந்து கொண்டே அவருடைய பெருமையை அறிந்து உயிர்ப்பணி புரிவதன் மூலமே, பரோபகாரத் தொண்டு ஆற்றுவதன் மூலமே அருட்பெருஞ் ஜோதியின் அனுபவத்தைப் பெற வேண்டும்; பெற முடியும். வள்ளலாரின் அனுபவம் இது.




அன்பார்ந்த வாசகப் பெருமக்களுக்கு ஓர் நற்செய்தி! ஒவ்வொரு மாதப்பூச நன்னாளன்று, அருள்ஜோதி அன்ன ஆலயம் சார்பாக, வடலூர் அருட்பயணம் ஏற்பாடு செய்யப்படுகிறது.

அருட்பயணத்தில் தரிசிக்கப்படும் திருத்தலங்கள்

1.சத்திய தருமச்சாலை, 2.சத்திய ஞானசபை, 3. வள்ளல் பெருமான் அவதரித்த மருதூர் இல்லம்


4.கருங்குழி இல்லம் 5.தீஞ்சுவை நீரோடை மற்றும் 6.சித்திவளாகம்.

இந்த புனித பயணத்தில் கலந்துகொள்ளபவர்கள் ஏழு நாட்களுக்கு முன்னதாகவே பதிவு செய்ய வேண்டும். பதிவு கட்டணம் ரூ.800 (உணவு உள்பட) பயணம் அருள்ஜோதி ஆலயத்தில் இருந்து காலை 9.00 மணிக்கு புறப்பட்டு மறுநாள் காலை 5.00 மணிக்கு அழைத்துவரப்படுவர். எனவே பெயர்களை முன்பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தொடர்புக்கு: 9003034056

குறிப்பு: அடுத்த பயணம்: (02.04.2020) (30.04.202.)

திரு.கணேசன் அவர்கள் வடலூர் அருட்பயணத்தில் மாதந்தோறும் தவறாமல் வருவது வழக்கம். இவர் வடலூர் அருட்பயணத்தால் உடல்நலம் ஆரோக்கியமாக இருப்பதாகவும் அவர்களது குடும்பம் மகிழ்ச்சியாகவும், ஆரோக்கியமாக இருப்பதாகவும் கூறினார்கள். அவர்களின் இந்த மகிழ்ச்சிக்கு காரணம் வடலூர் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் என்ற கூறுகிறார். மேலும் இவர்களின் குடும்பமும், மகிழ்ந்து அருள்துணையால் வாழ்க வாழ்க வாழ்க...



## நோயும் பேயும்

வேட்டவலம் ஜமீன்தார் அப்பாசாமி பண்டாரியார்க்கு மனைவியர் இருவர். ஒருவரை பிரம்மராட்சசி பற்றிக்கொண்டிருந்தது, மற்றொருவருக்கு மகோதரம். இத்துன்பங்கள் நீங்க மந்திரவாதிகளையும், மருத்துவர்களையும் நாடியும் குணமாகவில்லை. வள்ளலாரது மகிமையைப் பிறராலறிந்த பண்டாரியார் வள்ளலாரை அழைத்து வரும்படி தக்கவரை வடலூருக்கு அனுப்பினார். ஒரே மாதிரியான இரண்டு நாற்காலிகளை அமைத்து அவ்விரண்டில் தான் மனத்தில் நினைத்த நாற்காலியில் உட்காருவாராயின் மகான் எனத் தீர்மானிக்கலாமென்று எண்ணினார்.

வள்ளலார் வீட்டிற்குள் நுழையத் தெருவாயிற்படியில் வரும் போதே பிரம்மராட்சசி பிடித்த மனைவியார் வந்து வணங்கி “உத்தரவு கொடுக்கவேண்டும். நான்போய் வருகிறேன்” என்று கூறி விபூதிபெற்றார். வள்ளலார் உட்சென்று பண்டாரியார் மனத்தில் எண்ணிய நாற்காலியில் அமர்ந்தார். பண்டாரியார் இவரே உள்ளபடி மகான் எனத்தெளிந்து தன் துன்பங்களை முறையிட்டார். வள்ளலார் அவரது இளைய மனைவிக்கு மூன்று வேளை விபூதி கொடுத்துக் குணமாக்கினார். அன்றியும் அக்குடும்பத்தாரைச் சுத்த போஜன முடையராய்ச் செய்தார்.

**நீடிய பிணியால் வருந்துகின் றோர்என் நேர்உறக் கண்டுஉளந் துடித்தேன்.**

– திருவருட்பா

தயவு

சத்விசாரத்திற்கு ஏதுவான சிந்தனைகள்

# நான் யார்? கடவுள் எங்கே ? பிரபஞ்சம் (உலகம்) என்ன ?

எல்லா துன்பங்களிலிருந்தும் விடுதலை பெற ஒரே வழி "தன்னை யார்" என்றும் "தனது உண்மை " என்னவென்றும் அறிதல் வேண்டும். கற்பனை கடந்து மனிதன் உண்மையையும், கடவுள் உண்மையையும் உள்ளபடி அறிய அபயம் வேண்டி நிற்போம்.

........... .......யார்?

யார் ............ (கோடிட்ட இடத்தில் தங்கள் பெயரை குறிப்பிட்டு வாசிக்கவும்)

,,,,,,,,,,,,,,,,,,, என்ற பெயர் எதைக்குறிக்கிறது? உடலையா? உயிரையா? மனத்தையா? அறிவையா? அறிவின் நடுநிலையையா? எதுவாக உன்னைக் கண்டு கொண்டுள்ளாய்? நான் எதுவோ? நான் யாரோ?

நான் பிரச்சனைகள், பாரங்கள், பயம், கவலை, துன்பம், வறுமை, கொடிய நோய்ப்பிணிகள், விபத்து, ஆபத்து, மூப்பு மரணத்திலிருந்து விடுபடுவது எப்படியோ? எப்பொழுதோ? இதற்கு உண்மையாக ஒரு வழி உண்டோ ?



"நான் யார்? என்று அறியேன்–எங்கோன்
யார்? என்று அறியேன்"

–என்பது திருவருட்பா பாடல்.

தன்னை அறிந்து இன்பமுற வெண்ணிலாவே
ஒரு தந்திரம் நீ சொல்ல வேண்டும் வெண்ணிலாவே

–என்று வள்ளற்பெருமான் வேண்டுகிறார்.

"தன்னை யறிய தனக்கொரு கேடில்லை
தன்னை யறியாமல் தானே கெடுகிறான்
தன்னை அறியும் அறிவை அறிந்தபின்
தன்னை அருச்சிக்கத்தான் இருந்தானே"

–என்பது திருமூலர் திருமந்திரம்

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் தன்னை அறிந்து கொள்ள வேண்டும். அதுவே தலையாய கடமை, இலட்சியம்! எல்லா துன்பங்களுக்கும் மூல காரணம் தன்னை யார்? ........

"தன்னையும் தனக்கு ஆதாரமான தலைவனையும், கூடஸ்தனையும் அறிந்து கொள்ள வேண்டும்"

–என்பது திருவருட்பா உபதேசம்.

தன்னை யறியும் அறிவுதனைப் பெறில்
பின்னைப் பிறப்பில்லை வீடு
தன்னை யறிந்து செறிந்தடங்கி தானற்றால்
பின்னைப் பிறப்பில்லை வீடு

–ஔவைக்குறள்.

அன்பர் ஒருவர் ஞானி ஒருவரை அணுகி "கடவுள் , இருக்கின்றாரா? எங்கு இருக்கின்றார்? அவர் எப்படி இருப்பார்? எனக் கேட்டார். அதற்கு அந்த மகான் "நீ இருக்கின்றாயா? எப்படி இருக்கின்றாய்? எதுவாய் இருக்கின்றாய்? என முதலில் தெரிந்து கொள்; பின்னர் கடவுளின் இருப்பு தானே தெரிய வரும் என்றார்.

இதன் விளக்கம் என்னவெனில், மனிதன் கடவுளுக்கு வேறானவன் அல்லன், கடவுளுக்கு வேறாக எப்பொருளும் எவ்வுயிரும் இல்லை, மனிதன் அறியாமை ஆணவ இருளால் தன்னை அறியாது அல்லல்படுகின்றான்.

பிறப்பு இறப்பு எனும் எல்லையில்லா துன்பப்பெருங்கடலில் சிக்கி மீள இயலாது தவிக்கின்றான்.

மனதை நினைப்பு மறப்பு அற நிலை நிறுத்தி ஓர்மையோடு உள்நோக்கி பார்த்தால், "இருப்பது ஒன்றுதான் அதுதான் எல்லாமாய் எல்லோருமாய் இருக்கின்றது" என்பது தெரியவரும். இதையே, "ஒன்று என்று இரு; தெய்வம் உண்டு என்று இரு; என்று சிவஞானிகள் உரைத்தனர்.

**"என்னையும் இருப்பு அது ஆக்கினன்"** என்பது திருவாசகம்.

உடல், மனம், உயிர், ஆகிய தத்துவங்களைக் கடந்து, நிராதாரத்தே ஏறி, மேனிலையில் ஆன்ம சிதாகாசத்தே உற்று,

**"உன்னைப்பார், உன்னுள்ளே என்னைப்பார் ஊரைப்பார்த்து உழலாதே"** என்று வள்ளல் பெருமானாரின் திருவருட்பா மூலமாக எல்லாம் வல்ல ஆண்டவரே, உலக மக்கள் அனைவர்க்கும் தயவுத் தாயாகி நின்று உபதேசம் புரிகின்றார். இந்த அக உண்மையைக் கண்டு அழியாத ஆனந்தம் உறுவதற்காக இறைவனிடம் வள்ளலார் வேண்டுகிறார் அது

"இன்று வருமோ நாளைக்கே வருமோ அல்லது

மற்றென்றுவருமோ அறியேன் எங்கோவே

துன்றுமல வெம்மாயை அற்று வெளிக்குள் வெளிக்கடந்து.

................................

**வெளிக்குள் வெளி கூட** என்னும் சும்மா இரு சொல்லற என்னும் அருள்நெறி வழிகாட்டுகின்றது.

## ஒரு சிறு கதை

உலக வாழ்க்கையில் பலவேறு துன்பங்களில் சிக்கிப் பலகாலம் அவத்தையுற்று ஒருவாறு தனது உலகியல் கடமைகளை முடித்துக்கொண்ட அன்பர் ஒருவர், தனது இறுதிக் காலத்தையாவது தெய்வ சிந்தனையில் கழித்து நற்கதி காணலாம் என எண்ணி, உண்மையான ஞானாசிரியரைத் தேடித் திரிகின்றார். இறைவன் திருவருளால், அவருக்கு ஒரு மெய்ஞ்ஞானியின் இருப்பிடம் தெரிய வருகிறது. ஒரு தனிப்பட்ட இடத்தில் அந்த ஞானி அன்பு இல்லம் அமைத்து வருவபர்களுக்கு உள்ளத்தே ஞானத் தீயை ஏற்றி வைக்கின்றார். அண்டும் அன்பர்க்கு உணவு கொடுப்பதும், உள்ளே அறிவு கொளுத்துவதும் தான் அவர் திருச்செயல்.

அந்த தயவு இல்லம் தேடி, இந்த அன்பர் அங்கு அடைந்து, வாயிலில் நிற்கின்றார். அப்பெருமான் உள்ளே இருத்தல் கண்டு, வெளியிலிருந்து "சுவாமி" என மெதுவாக பணிவுடன் குரல் கொடுக்கிறார். சுவாமிகள் எல்லாம் அறிந்தவராக இருத்தலின், வந்தவரைப் பார்த்து பக்குவத்தை அறிந்து இனி அவருக்கு உண்மையும், அமைதியும், ஆனந்தமும் நிறைந்த சத்திய வாழ்வு அளிக்கத் திருவுளம் கொண்டார் அவரை உள்ளே அழைத்து, அமர வைத்து "யாரப்பா நீ" என்று கேட்டார். அதற்கு அந்த அன்பர், "என் பெயர் பழநி" என்றார்

அந்த ஞானி அவரிடம், "அப்பா உன் பெயரை நான் கேட்கவில்லை நீ யார்? என்றார். அதற்கு அந்த அன்பர் நான், "குளபதம் என்ற ஊரிலிருந்து வருகிறேன்" என்றார்.

அப்பெருமானோ, "நீ எந்த ஊரிலிருந்து வருகிறாய் என்று நான் கேட்கவில்லை, நீ யார் என்று சொல்".

அன்பர், "என் அப்பா பெயர் முருகன், நான் தனியார் நிறுவனம் ஒன்றில் வேலை செய்கின்றேன்" என்றார்.

அந்த ஞானி. "அப்பா, ! உன் அப்பா பெயரையோ, நீர் என்ன உத்தியோகம் பார்க்கின்றாய் என்றோ நான் கேட்கவில்லை. நீ யார் என்று மட்டும் சொல்" என்றார்.

அன்பர் திகைத்தார். என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை. ஒருவாறு பின்பு தெளிந்து தனது உடம்பைக் காட்டி "இதோ நான் இது தான் நான்" என்றார். சுவாமிகள் புன்முறுவல் புரிந்து அருகில் அழைத்து, அன்பர் கையை தொட்டு, இது என்ன? என்றார். அன்பர் இது என் கை என்றார்

ஞானி : இது என்ன?

அன்பர் : இது என் உடம்பு

ஞானி : இது என்ன ?

அன்பர் : இது என் தலை, என் கண் , என் வாய்,

ஞானி : இது என்ன?

அன்பர் : இது என் பை , என் பணம்,

ஞானி : ஆமாம், எல்லாவற்றிற்கும் என் என் என்று சொல்லுகின்றாயே

எனவே, உன் வார்த்தையை கூர்ந்து



நோக்கினால் இதுவெல்லாம் உன் உடமைகளே அன்றி, நீ அல்ல என்றும் இதற்கு அப்பாலாய் இவற்றிற்கு சொந்தக்காரன் ஒருவன் வேறாக உள்ளான் என்றும் தெரிகிறது அது எது? அந்த என் என்ற சொல்லுக்கு உடையவன் யார்?

Who is the proprietor? who is the owner of the property?

*அன்பர் : ஐயா அது தான் நான் என்றார் ?*

*ஞானி : அந்த நான் என்பது தான் என்ன? எங்கே இருக்கிறது? எதை*

*நான் என்று சொல்லுகின்றாய் ? மேலும் உன் தேகம் உனக்கு காட்சிப்பொருளாக முன்னிலையில் அறிபடு பொருளாக இருத்தலின் இதனின் வேறாக நீ தேகவடிவத்தை காணும் சாட்சியாக, அறியும் அறிவாக இருத்தலின் தேகம் நீ அல்ல. பின்பு அன்பர் யோசிக்கின்றார், ஒருவாறு சிறிது நேரத்திற்குப் பின்பு யூகித்து, "அது என் உயிராக இருக்குமோ, என்னவோ" என்றார். பிறகு அந்த மெய்ஞ்ஞானியானவர் அந்த அன்பருக்கு ஆத்ம இரகசியத்தையும் சிவ இரகசியத்தையும் உபதேசிக்கலானார்.*

**"உயிர் அனுபவம் உற்றிடில் அதனிடத்தே ஓங்கும் அருள் அனுபவம் உற்றிடும்" என்பது வள்ளலார் வாக்கு.**

ஒருவன் தன் உயிரின் உண்மையை (நித்திய ஜீவன் ஆகிய ஆன்மா) தெரிந்து கொள்ளாவிடில், ஆன்மானுபவமும் சிவானுபவமும் பெறமுடியாது அதைப் பெற முடியாது போனால், பிறவிப் பெருங்கடற் துன்பத்திலிருந்து தப்ப முடியாது.

இந்த பிறவி போனால், மறுபடியும் அடுத்த பிறவியில் இது போன்ற அக உண்மையை அறிவதற்கான சூழ்நிலையும் அறிவும் கிடைப்பது அரிது எனவே காலம் தாழ்த்தாது தனது உண்மை வடிவத்தை அறிய அதி தீவிரமாக முயலவேண்டும்.

நான் என்ற ஒன்று வெளியே தோற்றுவதல்ல, நான் என்பது இது வரை நாம் எண்ணியது போல ஜடமான தேகமாக தோன்றி, சிலகாலம் விளங்கி பின் மங்கி மறைந்து ஒழியும் வடிவமல்ல. இது (நான்) உள்ளிருந்து ஓங்கும் அருட்ஜோதி அணு: அறியாமையில் உள்ள வரை அதன் உண்மைப்பொருள் மிக இரகசியமாக வைக்கப்பட்டுள்ளது. உண்மை நிலை பெற விழைவோர்க்கு உரிமையானது: வெளிப்படையானது: உள்ளே மிகமிக ஆழ்ந்த நிலையில் பேரமைதியில் வைக்கப்பட்டுள்ளது. இது அறிவு சொரூபமானது : தயவே இயல்பானது: மெய்ஞ்ஞான உணர்வானது :. நான் என்பது அற்புதமான ஓர் அக உணர்வு இது கடவுளின் இயற்கை விளக்க சித்துருவம் பிறப்பு இறப்பு அற்றது அன்புச் சிவமாகிய ஏகமான கடவுளே "நான்" என்ற அனேக வேடம் பூண்டு சச்சிதானந்த அனுபவத்தின் பொருட்டு எண்ணற்ற ஆன்ம கோடிகளாக விளங்கி நடித்துகொண்டு இருக்கின்றார். நானாகிய மனிதனும் தானாகிய கடவுளும் சேர்ந்த இரண்டற்ற நிலை கொண்ட ஓர் அணுவே ஆன்மா, இது பேரானந்த அனுபவம் கொண்டது. என்றெல்லாம் மெதுவாக தெளிவுப்படுத்தினார்.

இப்போது எடுத்துள்ள இந்த தேகம் கருப்பையில் ஓர் அணுவாய் வளரத் தொடங்கிய அந்த நொடி முதல், இந்த தேகம் மூத்து ஒழியும் அந்த கடைசி நொடி வரையிலும் "இருக்கின்றேன் நான்" என்ற இருப்புணர்வு கொண்டு பிரகாசிப்பது அந்த ஆன்மாவே. இது உண்மையில் பிறப்பு இறப்பு அற்றது இதைச் சூழ்ந்து பலவாகிய தேகங்கள் வருவதும் போவதுமாய் உள்ளது. அது எப்போதும் நிகழ்காலத்திலேயே என்றென்றும் வாழ்வனுபவம் பெற்று வருகின்றது. புற வடிவங்கள், சூழ்நிலை அனுபவங்கள் வேறு வேறாக இருப்பினும் எல்லோருள்ளும் இந்த நான் என மைய உணர்வு ஒரே மாதிரியாக விளங்குகிறது.

அந்த அசையாத அமைதியான ஆன்ம நிலைக்கு புறத்தில் தான் மாயா பிறப்பு இறப்பு

நிகழ்கின்றது நெடுங்கோடி காலமாக ! இந்த பிறவிப் பெருங்கடற் துன்பத்திலிருந்து ஒருவன் விடுதலை பெறவேண்டுமானால் தன்னை அறிந்து கொள்ள வேண்டும் என மேலும் உபதேசிக்க தொடங்கினார். இப்போது நீ உன்னை மாயா சம்பந்தத்தால் ஐம்பூதத்தால் ஆன சிற்பிரபஞ்சமாகிய தேகத்தில் குழைத்துக்கொண்டு குழம்பிப்போய் அதையே நீ எனக்கொண்டுள்ளாய், இந்த நிலைமை மாறவேண்டும் மாறித்தான் ஆகவேண்டும். அப்போது தான் உனக்கு உண்மையான அழியாத ஆனந்த வாழ்வு உண்டாகும்.

**"என்னை அறிந்திலேன் இத்தனை காலமும்**
**என்னை அறிந்தபின் ஏதும் அறிந்திலேன்**
**என்னை அறிந்திட் டிருத்தலுங் கைவிடாது**
**என்னைவிட் டென்னை உசாவுகின் றானன்றே"**

– திருமந்திரம்

**தன்னை யார்? என்று அறிய தலைப்படுவோம் நாம் ஒவ்வொருவரும்**


**"நான் என்றும் தான் என்றும் நாடாத நிலையில்**
**ஞானவடி வாய் விளங்கும் வானநடு நிலையே**
**ஊன் என்றும் உயிர் என்றும் குறியாமே முழுதும்**
**ஒருவடிவாம் திருவடிவம் உவந்தளித்த பதியே**
**தேன் என்றும் கரும்பென்றும் செப்பரிதாய் மனமும்**
**தேகமும் உள் உயிர் உணர்வும் தித்திக்கும் சுவையே**
**வான் என்றும் ஒளி என்றும் வகுப்பரிதாம் பொதுவில்**
**வயங்குநடத் தரசேசஎன் மாலையும் ஏற்றருளே"**

–அருள்விளக்கமாலை, திருவருட்பா

**"நான் எனவும் நீ எனவும் இருதன்மை**
**நாடாமல், நடுவே சும்மா**
**தான் அமரும் நிலை இதுவே சத்தியம்சத்**
**தியம் என நீ தமிய னேற்கு**
**மோனகுரு ஆகியும் கை காட்டினையே,**
**திரும்பவும் நான் முளைத்துத் தோன்றி**
**மானதமார்க் கம்புரிந்து இங்கு அலைந்தேனே.**
**பரந்தேனே வஞ்ச னேனே."**

**நன்று அறியேன் தீது அறியே நான் என்று நின்றவன் ஆர்**
**என்று அறியேன் நான் ஏழை என்னே பராபரமே**

*–தாயுமானவர்*



**பிறருடைய பசியைப்**
**போக்குவதோடு மட்டும்**
**ஒருவனுடைய ஒழுக்கமும்**
**கடமையும் முடிந்துவிடாது.**
**பிறர்க்கு ஏற்படும் துன்பங்களைக்**
**களையவும் ஒவ்வொருவரும்**
**முன்வர வேண்டும்**

*......ஞான ஆசார சிரத்தையாகி யான் வேறு என் உடல் வேறு சகத்து இயாவும் வேறாக............... நிகழ்ச்சியா மநோதீத சிவசொரூப மாயோகி யென ...............ஆள்வாய்*

வான் காணா மறைகாணா மலரோன் காணான்
மால்காணான் உருத்திரனும் மதித்துக் காணான்
நான்காணா இடத்து அதனைக் காண்பேன் என்று
நல்லோர்கள் நவில்கின்ந நலமே வேட்கை
மான்காணா உளக்கமலம் மலர்த்தா நின்ற
வான் சுடரே ஆனந்த மயமே ஈன்ற
ஆன்காணா இளங்கன்றாய் அலமந்து ஏங்கும்
அன்பர்தமைக் கலந்துகொளும் அமலத்தேவே.

*–மகாதேவமாலை, திருவருட்பா.*


நான் என்று எதைச் சொல்வேன் அது நீயே ஆனாய்
ஞானம் சேர் ஆன்மாணு நானோ நீ தானே
ஊன் என்னும் உடல் எனதோ அதுவுமுனதாமே
உடல்பெற்ற உயிர் உணர்வும் உடமைகளும்
தான் இன்று தயவாலே தருகின்றாய் இந்த
தனித்த சுதந்தரம் உனக்கே உளதாலே நீதான்,
மேல் நின்று மேதினிமேல் எனைக்கலந்து நானாய்
விளங்கற்கு தயவு செய்வாய் வேறு புகல் இலனே.

*–சுவாமி சரவணானந்தா*

# சாகா நிலை தரும் சத்திய வாழ்வு

## எண்ணமும் இரக்கமும்
## மனிதனை நிர்ணயிப்பது எண்ணங்களே!

தெருவில் செல்லும் மனிதர்களை, அவர்களின் குணங்களை வைத்து நாய் போகிறது கழுதை போகிறது எனக் கூறினார் ஒரு சாமியார். தெருவில் செல்லுபவர்கள் மனிதர்களோயாயினும், அவர்களிடம் மிகுத்துக் காணப்படும் குணங்களை வைத்து அதற்கு ஒப்பான மிருகங்களின் பெயரைச் சொல்லுகிறார். இப்போது மிருக தேகங்களின் உடமைப்பை, அவற்றின் குணங்களை வைத்து அழைக்கிறார். ஆனால் அவர் பார்த்து அழைப்பது மனிதர்களை யாகும். எனவே மனித மிருக தேக அமைப்பை அவற்றின் குணங்களைக் கொண்டு கண்டுகொள்ளுகின்றோம். எனவே ஒவ்வொரு ஜீவனுக்கும் அது தாங்கியிருக்கும் தேகத்திற்கு ஏற்ப ஒன்றோ அதற்கு மேற்பட்ட சில விசேட குணங்கள் வெளிப்படுகின்றன அல்லது மறைந்துள்ளன். இது மனிதனுக்கும் மற்ற உயிரினங்களுக்கும் பொதுவாம்.



மனிதனிடத்துக்கள், காமம், புலை, கொலை, சினம், வெகுளி, பொய், சூது, வஞ்சகம் போன்ற தீய குணங்கள் முதலியன அறியாது அவனிடம் குடிகொண்டு அவனுக்குள்ளே

தலைமறைவாக உள்ளன. சந்தர்ப்பம் ஏற்படும் போதெல்லாம் இவை மெல்லத் தலையெடுத்து மனிதனைக் கெடுக்கின்றன அல்லது அழிக்கின்றன. இவற்றை அறிந்தும் அறியாதது போல் மனிதன் உலகியல் சபலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறான். ஒரு முடிவான கட்டத்தில் அல்லது அதற்கு மேல் திருந்துவதற்கு வாய்ப்பில்லாத ஒரு நிலையில் அவன் அதைப்பற்றி வருந்துகிறான், துன்பப்படுகிறான்.

மனிதனிடம் அன்பு, தயவு, கருணை போன்ற உயர்ந்த பண்புகளும் பொறுமை, சாந்தம், அகிம்சை, உண்மை , நேர்மை போன்ற சிறந்த பண்புகளும் நிறைந்து இருப்பினும் அவை அனைத்தும் அவனிடத்து மறைந்து கிடக்கின்றன. சில சந்தர்ப்ப சூழ்நிலைகளில் நானும் மனிதனிடம் இருக்கின்றேன். என்பதுபோல் தலையைக் காட்டி இழுத்துக் கொள்ளுகின்றன. மனிதன் அவற்றைப் பயன்படுத்துவும் முடிவதில்லை அவற்றால் அவன் பயன்படுவதும் இல்லை .

ஒருவனிடம் கெட்ட குணங்களும் நிறைந்து கிடக்கின்றன. நல்ல குணங்களும் மறைந்து கிடக்கின்றன. இரண்டும் அவனைக் காவாது கைவிடுமானால், அவன் பக்குவப்படுவது மாமனிதனாவது எப்படி? எப்போது? தீயவனும் நல்லவனைப்போல் வாழ்ந்துகாட்ட ஆசைப் படுகிறான். வறியவனும் பெரிய மனிதனாக வாழவே ஆசைப்படுகிறான். உலகியல் வாழ்க்கை இதுவானால் உண்மை மனிகனாவக உயர்வாக எப்படி?

உருவத்தால் தோற்றத்தால் வேறுபட்டிருப்பினும் அவை அனைத்திற்கும் ஒரே உயிரியல்பு அடையதுவாம். இக்கருத்தையே, பயிர்ப்புறு கரணப் பரிசுகள் பற்பல உயிர்த்திரள் ஒன்றென அரைத்த மெய்ச்சிவமே! அகவல் 971 என்னும் அடிகளில் கண்டு தெளியலாம்.

## திருப்புகழ்ச்சி

தாயும் தந்தையும் தெய்வமும் குருவும்
தாங்கு கின்றதோர் தலைவனும் பொருளும்
ஆயும் இன்பமும் அன்பும்மெய் அறிவும்
அனைத்தும் நீ என ஆதரித் திருந்தேன்
ஏயும் என்னள விரக்கம் ஒன் றிலையேல்
என்செய் வேன் இதை யார்க்கெடுத் துரைப்பேன்
சேயும் இன்னருள் நசைஉறுங் கண்டாய்
தில்லை மன்றிடைத் திகழ் ஒளி விளக்கே.

அருள்பழுத் தோங்கும் கற்பகத் தருவே
அருண்மருந் தொளிர்குணக் குன்றே
அருள் எனும் அமுதந் தரும் ஒரு கடலே
அருட்கிர ணங்கொளும் சுடரே
அருள்ஒளி வீசும் அருள்பெறன் மணியே
அருட்சுவை கனிந்தசெம் பாகே
அருள்மணம் வீசும் ஒரு தனி மலரே
அருண்மய மாம்பர சிவமே.

## தன்னம்பிக்கை

ஒரு ஊரில் ஒரு இளம் பெண் பால் விற்று ஜீவியம் செய்து வந்தாள். அவள் தினமும் தன்னிடம் இருந்த ஒரு பசு மாட்டிலிருந்து பாலைக் கறந்து அதை ஒரு குடத்திலிட்டு தன் தலையில் வைத்து எடுத்துச் சென்று வியாபாரம் செய்து வந்தாள். தான் ஏழையாக இருப்பதனாலே இப்படி தினமும் பால் விற்று சீவிக்க வேண்டி உள்ளது என் போன்ற மற்றப் பெண்கலெல்லாம் விதம் விதமாக ஆடை அணிந்து எடுப்பாகச் செல்கிறார்களே என தன்னுள் கவலையுடன் இருந்தாள். ஒருநாள் அவள் வழக்கம்போல் பாலைக் கறந்தெடுத்து குடத்திற்குள் விட்டு அதனை விற்பதற்காக தெரு வீதி வழியே சென்று கொண்டிருந்த போது தன் வாழ்க்கைத் தரத்தை எப்படி முன்னேற்றலாம் என கற்பனை செய்தாள்.

இன்று பாலை விற்று வரும் பணத்தில். சில கோழிக் குஞ்சுகள் வாங்குவேன். அவை வளர்ந்து பெரிதானதும்..அவைகளை விற்று வரும் பணத்தில் இரண்டு ஆட்டுக் குட்டிகள் வாங்குவேன்.. அவை வளர்ந்ததும் அவற்றை விற்று இன்னொரு பசு மாடு வாங்குவேன். அவற்றைக் கொண்டு ஒரு பெரிய மாட்டுப் பண்ணை வைப்பேன். அதில் வேலை செய்ய பல பெண்களை வேலைக்கு அமர்த்துவேன் என்று தன் வாழ்க்கையை தரத்தை முன்னேற்றலாம் என நினைத்தாள்.

இந்தகதையில் இருந்து நமக்கு என்ன புரிகிறது அவளது தன்னம்பிக்கையை காட்டுகிறது. இதேபோல நாமும் தன்னம்பிக்கையோடு வாழ கற்றுக்கொள்ள வேண்டும்.



# சரியான முடிவு எடுப்பது எப்படி?

**ம**ற்றவர்களுக்கு குல்லா போட்டே நம்மில் பெரும் பாலோர் பழக்கப்பட்டுவிட்டோம். அவ்வாறு செய்தால்தான் நாம் முன்னேற முடியும் என்று நம்பி ஏமாறுகிறோம்.

ஆனால் முன்னேறத் துடிப்பவர்கள் தமக்குத் தாமே தொப்பி அணிந்துகொள்ள வேண்டும் என்கிறார் ஓர் அறிஞர். 'சரியான முடிவு எடுப்பதற்கு ஆறு கற்பனைத் தொப்பிகள் அவசியம்' என்கிறார் எட்வர்ட் டி. போனா. இது அவருடைய பிரபலமான ஒரு கருத்து ஆகும்.

'Lateral Thinking' என்பது சிந்தனையிலே புதிய வகையான சிந்தனையாகும். அந்த வார்த்தையை உருவாக்கியதே அவர்தான். இது நாம் நமது வாழ்க்கையில் சரியான முடிவுகள் எடுப்பதற்கு அவருடைய இந்தக் கருத்து மிகவும் உபயோகமாக இருக்கும். ப

அது என்ன கற்பனைத் தொப்பிகள் ஆறு?

முக்கியமான முடிவுகளை எடுக்கும் போதெல்லாம் இந்தக் கற்பனைத் தொப்பிகள் ஆறினையும் ஒன்றன்பின் ஒன்றாக வரிசையாக அணிந்துகொண்டு முடிவு எடுக்க வேண்டும்.

முதலில் வெள்ளைத் தொப்பி: முடிவெடுப்பதற்கு முதல் தேவை சரியான தகவல்கள். தகவல்களைத் திரட்டுவதுதான் வெள்ளைத் தொப்பி அணிவதின் நோக்கம். ப

இரண்டாவது, பச்சைத் தொப்பி: இது கற்பனை சக்தியைக் குறிக்கிறது. இந்தத் தொப்பி, கிடைத்த தகவல்களை வைத்துப் புதுப்புது யோசனைகளை உற்பத்தி செய்யத் தூண்டுகிறது.

மூன்றாவது, மஞ்சள் தொப்பி: இதன் வேலை என்னவென்றால், பச்சைத் தொப்பி கொடுத்த யோசனை களில் எது நடைமுறைக்குச் சரிப்பட்டு வரும், எது சரிப்பட்டு வராது என்பதைச் சரியாக இனம் கண்டு மற்ற யோசனை களையெல்லாம் வடிகட்டிவிடும்.

நான்காவது, கறுப்புத் தொப்பி: இது நியாய,

தர்மங்களைப் பாதுகாக்கும் தொப்பி, நடக்கக்கூடிய, நமக்கு மட்டும் நன்மை தரக்கூடிய சுயநலமான யோசனையாக இருந்தால், இது சமூகத்திற்குக் கேடானது, ஆபத்து நிறைந்தது' என்று இந்தத் தொப்பி எச்சரிக்கும்.

ஐந்தாவது, சிவப்புத் தொப்பி: இந்தத் தொப்பிக்குத் தர்க்க அறிவு, தகவல் அறிவு பற்றியெல்லாம் தெரியாது. 'ஏதோ என் மனதிற்குப் படுகிறது... இது சரியாகவரும்' என்று சொல்வோம் அல்லவா? இந்த உள்ளுணர்வு (Intuition) தான் சிவப்புத் தொப்பி.

ஆறாவது, நீலத் தொப்பி: மற்ற ஐந்து தொப்பிகள் எடுத்து வைத்த வாதப் பிரதிவாதங்களை ஆராய்ந்து சரியான, தெளிவான இறுதிமுடிவு எடுக்கும் தொப்பி இது.

இதுதான் எட்வர்ட் டி. போனா கூறும் கருத்து. இதைச் சுருக்கமாக நாம் எப்படிப் புரிந்துகொள்வது? இப்போது ஏதோ ஒரு விஷயத்திற்காக நாம் முடிவெடுக்க வேண்டும் என்று வைத்துக் கொள்வோம்.

முதலில் அது சம்பந்தப்பட்ட தகவல்களைத் திரட்ட வேண்டும். அந்தத் தகவல்களை அடிப்படையாக வைத்துக் கொண்டு புது யோசனைகளை உருவாக்க வேண்டும். இதில் உபயோகப்படாத யோசனைகளைக் கூட ஆராய வேண்டும்.

ஒரு விஷயம் நமக்கு நல்லது என்று தோன்றினாலும், அதனால் மற்றவர்களுக்கு ஏதும் இடையூறு இருக்குமா? என்று சிந்திக்க வேண்டும்.

பிறகு நமது உள்ளுணர்வு என்ன சொல்கிறது என்று பார்க்க வேண்டும். கடைசியாக எல்லாவற்றையும் ஆராய்ந்து ஒரு நல்ல, தீர்க்கமான முடிவுக்கு வர வேண்டும்.

இதுதான் எட்வர்ட் டி. போனா சொல்லும் ஆறு வகையான சிந்தனைத் தொப்பிகள்.

இதில் இன்னொரு விஷயம் என்னவென்றால், சில சந்தர்ப்பங்களில் இப்படி வரிசையாகப் பார்த்துக் கொண்டு இருக்க முடியாது.

உடனடியாக முடிவெடுக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் பல உண்டு. உதாரணமாக, கால் பந்தாட்டத்தில் பந்தை உதைப்பதா? அல்லது தடுப்பதா? என்பது போன்ற நேரங்களில் சிவப்புத் தொப்பிதான் சரியானது.

அதாவது உள்ளுணர்வு. அது கூர்மையாக இருக்க வேண்டும். அதற்கு மனம் தெளிவாக இருப்பது மிக மிக அவசியம்.

# ஜீவகாருண்யமே கடவுள் வழிபாடு!

சுத்த சன்மார்க்கத்தை பின்பற்றும் உண்மையான சன்மார்க்கிகள் இந்த இக்கட்டான நேரத்தில்.ஆதரவு அற்ற ஏழை எளிய மக்களின் பசிப்பிணியை அறிந்து பசியைப் போக்குவதே விரதமாக்க் கொண்டு தங்களால் முடிந்த அளவு பசிப்பிணியைப் போக்க வேண்டும்.

பசிப்பிணியைப் போக்குவது சுத்த சன்மார்க்கிகளின் கடமையாகும்.

பசிப்பிணியைப் போக்குவதற்கு எந்த அரசாங்கமும் சட்டமும் தடை செய்யாது.

எனவே காலம் கருதி பசிப்பிணியைப் போக்குவதே இறை வழிபாடாகும். கூட்டம் கூட்டாமல் தனித்தனியாக வரவைத்து உணவு வழங்குவதே சிறப்பாகும்.

இதுவே சிறந்த அருள் மருந்தாகும்.

சிந்திப்போம் உணர்வோம் செயல்படுவோம்.

## வள்ளலார் பாடல்!

மண்ணுல கதிலே உயிர்கள்தாம் வருந்தும் வருத்தத்தை ஒருசிறி தெனினும்
கண்ணுறப் பார்த்தும் செவியுறக் கேட்டும் கணமும்நான் சகித்திடமாட்டேன்
எண்ணுறும் எனக்கே நின்னருள் வலத்தால் இசைத்தபோ திசைத்தபோ தெல்லாம்
நண்ணும்அவ் வருத்தம் தவிர்க்கும்நல் வரந்தான் நல்குதல் எனக்கிச்சை எந்தாய்.!



# இருமலுக்கு மூலிகை!

வள்ளல் பெருமான் அவர்கள்.சென்னையில் உள்ள தன் நெருங்கிய அன்பர் திரு இரத்தினமுதலியார் அவர்களுக்கு 20.09.1864 ஆம் ஆண்டு ஒரு கடிதம் எழுதி அனுப்புகின்றார்.

அந்த கடித்த்தில் உள்ள செய்தியை நாம் அனைவரும் படித்து தெரிந்து கொள்வது மிக மிக அவசியமாகும்.

அன்பு, அறிவு, ஒழுக்கம் முதலிய நற்குணங்கள் வாய்ந்து நம்மிடத்து உள்ளன்பு வைத்த சிரஞ்சீவி இரத்தினம் முதலியார்க்கு சிவகடாக்ஷத்தினால் தீர்க்க ஆயுளும் திடதேகமும்.சகல சம்பத்தும் மேன் மேலுண்டாவனாக.

தங்கள் சுப சரித்திரங்களை அடிக்கடி கேட்க விரும்புகிறேன்.தங்களுக்கு இருமலால் தேகம் அபக்குவமாக இருக்கிறதாகத் தபாலில் எனக்குத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்தது தொடங்கி என் நினைப்பெல்லாம் தங்களிடமாகவே இருக்கிறது. நித்திரை பிடிக்கிறதுமில்லை.

நான் தொடங்கிய காரியங்கள் ஒன்றும் நடக்கிறதுமில்லை.மனம் அலை பாய்ந்து கொண்டே இருக்கிறது. உடனே புறப்படுவேன்.இவ்விடத்தில் ஒரு பெரிய தடை நேரிட்டிருக்கின்றது. அது இன்னும் பதினைந்து தினத்தில் விடும்.அதற்கு மேல் பிரயானப்படுகிறேன் என்றும் சொல்லி தபால் எழுதுகிறார்.



மேலும் எவ்விதத்தினும் ஐப்பசி மாதம் 12 நாளில் பிரயாணப்பட்டு வருகிறேன் .தாங்கள் நமது சாமி அவர்களைக் கொண்டு உபசாந்தி செய்து கொண்டு அதிக உழைப்பு எடுத்துக் கொள்ளாமல் ஜாக்கிரதையாக வரவேண்டும் கடினமான அவுஷதங்களைக் கொள்ள வேண்டாம் என்று கடித்த்தில் எழுதுகின்றார்.

நாம் கவனிக்க வேண்டியது!

இரத்தினமுதலியாருக்கு கொரோனோ வைரஸ்போல் தாக்கி இருமல் ஜுரம் வந்துள்ளது.அதனால் எந்த வேலையையும் செய்யாமல் ஓய்வு எடுக்க வேண்டும். வேலை போனால் போகட்டும் உடம்பை பத்திரமாக பார்த்துக் கொள்ள வேண்டும் என்று வள்ளல் பெருமான் கடிதத்தில் எழுதுகிறார்.

மேலும் அந்த இருமலுக்கு மூலிகை மருந்தை சொல்லி எப்படி உபயோகப்படுத்த வேண்டும் என்பதையும் தெரியப்படுத்து



கின்றார்.

முசுமுசுக்கை சமூலம் கொண்டு வந்து. பசும்பாலில் ஊறவைத்து. உலர்த்தி இடித்துச் சூரணமாக வைத்துக் கொண்டு நித்தியம் காலையில் தேயிலைத் தண்ணீர் காச்சி சாப்பிடுவதுபோல சலத்தில் போட்டு சுண்ட வைத்து.

பசும்பால் நாட்டுசக்கரை.மிளகுப்பொடி கலந்து கொஞ்சம் கொஞ்சமாகச் சாப்பிட்டு வரவேண்டும்

இதை சாமிகளுக்குத் தெரிவித்து அவாளைக் கொண்டு செய்வித்து சாப்பிட்டுக்கொண்டு வரவேண்டும்.

உத்தியோகம் தடை இருந்தால் அதை விடுத்து தெகத்தைப் பக்குவப்படுத்திக் கொள்ளுங்கள். தேகம் பக்குவமான பின்பு சிவானுக்கிரகத்தால் உத்தியோகம் சம்பாதித்துக் கொள்ளலாம்.

அது பரியந்தம் கடன் பட்டாவது ஜீவனம் செய்யலாம்.அது குறித்து அஞ்சவேண்டாம். என்று வள்ளலார் கடித்த்தில் எழுதி உள்ளார்.

இதில் நாம் தெரிந்து கொள்ள வேண்டியது.!

இருமல் கொரோனோ போன்ற கொடூரமான வியாதி என்பதை தெரிந்து கொள்ளவேண்டும்.

நுறையீரலை பாதித்தால் உயிருக்கே ஆபத்தாக முடியும்.உடனே கவனிக்க வேண்டும் என்பதை வள்ளலார் தெளிவாக சொல்லியதோடு அல்லாமல். அதற்குண்டான மூலிகை மருத்துவத்தை தெளிவாக சொல்லி உள்ளார்.

வள்ளலார் சாதாரண மனிதர் அல்ல. முற்றும் அறிந்த தெரிந்த.உணர்ந்த அருளாளர்.

அவர்சொல்லிய மருத்துவத்தை அசட்டை செய்யாமல் செய்து சாப்பிட்டு வாருங்கள். கொரோனோ போன்ற இருமல் இருக்கும் இடம் தெரியாமல் ஓடிவிடும் மறைந்துவிடும். மருந்தை சாப்பிட்டு வீட்டை விட்டு வெளியே வராமல் வீட்டிலே ஓய்வு எடுத்தால் போதுமானது.

இதுநல்ல தருணம் அருள் செய்ய இதுநல்ல தருணம்..

வள்ளலார் எழுதிய இந்த கட்டுரையை ஆன்மநேய சகோதர சகோதரிகளுக்கும் சன்மார்க்கிகளுக்கும் தெரியப்படுத்தவும்.

எல்லா வியாதிகளுக்கும் நம் தமிழ்நாட்டில் வாழ்த்த அருள் ஞான சித்தர்கள் மூலிகை கண்டுபிடித்து வெளியிட்டு உள்ளார்கள். நாம் கடைபிடிக்க தவறி விட்டோம்.அதனால் துன்பப்படுகின்றோம்.

வரும் முன் காப்பதே சித்தர்கள் கண்டுபிடித்த சித்த மருத்துவம்.


ஆரோக்கியமான வாழ்விற்கு அருள்ஜோதி மூலிகை மிட்டாய்கள்







வல்லாரை, தூதுவளை, சுக்கு, துளசி, புதினா, நெல்லிக்காய், அஸ்வகந்தா, ஓமம், நன்னாரி, பனங்கற்கண்டு போன்ற மூலிகைகளாலான மிட்டாய்கள் மற்றும் நிலவேம்பு பொடி முதலிய அனைத்து மூலிகைப் பொடிகளும் கிடைக்கும்.

இடம்: அருள்ஜோதி, எண்:128, மேல்பட்டி பொன்னப்பன் தெரு, பெரம்பூர், சென்னை - 600039.

தொடர்புக்கு: 04425589939, 9444089936



# புண்ணியத்தைத் தேடி...



## அருள்ஜோதி வாசகர்களுக்கு வணக்கம்!

மக்களின் பசியினை அகற்ற நாள்தோறும் அன்ன தர்மம் செய்து வரும் அருள்ஜோதி அன்ன ஆலயம் மற்றுமொரு அங்கமாக கோயம்பேடு மார்க்கெட்டில் பணி செய்யும் மக்களின் பசியைப் போக்குவதற்கு நாள்தோறும் கஞ்சிவார்த்தல் பணியை செய்து வருகின்றது. இந்தப் புண்ணியத் தொண்டில் பங்கு பெறுவதற்கும், கோயம்பேடு மார்க்கெட்டில் கஞ்சி ஊற்றுவதற்கும் தொண்டுள்ளம் கொண்ட நபர்கள் தேவைப் படுகிறார்கள்.

**தொடர்புக்கு: 044-25570770**

# அரிசித்தொண்டு அருளாளர்களுக்கு தயவான வேண்டுகோள்

ஆலய சேவாதாரிகள், அரிசித்தொண்டு அருளாளர்களைக் குறித்த நேரத்தில் சந்திக்க காலதாமதம் ஏற்படுவதினாலும், தங்களின் தயவான தொண்டு, குறித்த நேரத்திற்கு ஆலயத்திற்குக் கிடைக்க வேண்டிய காரணத்தினாலும், அருள்ஜோதி அன்ன ஆலயம் புதியதொரு வழிமுறையை வகுத்துள்ளது. அருளாளர்கள் தாங்கள் தயவுடன் அளிக்கும் அரிசித்தொண்டு மற்றும் கல்வித்தொண்டு காணிக்கையினைத் தங்களது வங்கியிலேயே (தற்போது இந்தியன் வங்கி அருளாளர்கள் மட்டும்) அருள்ஜோதி அன்ன ஆலயம் மற்றும் அருள்ஜோதி கல்வி அறக்கட்டளை கணக்கிலேயே செலுத்திடலாம். அருளாளர்கள் தற்போது வழங்கி வரும் ரூ.100/– காணிக்கையினை ரூ.150/–ஆக (நூற்றிஐம்பதாக) உயர்த்தி வழங்கிடுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறோம். **பெறப்படும் காணிக்கைகளுக்கு வருமானவரி சட்டம் 80 ஜி பிரிவின்படி வரிவிலக்கு உண்டு.**

From

To



**தொடர்புக்கு:**
**9003034056 / 25589575**

The Manager
Indian Bank
…………………………….. Branch
Chennai

Sir,

I am having Saving /Current Account with your Bank and the Account No. is ……………………………. I request you kindly to transfer a sum of Rs…………….. (Rupees……………………………………….………..only) to the following Account Holder on 5th of every month from May 2014 onwards.

| Details | Aruljothi Anna Alayam | Aruljothi Educational Trust |
|---|---|---|
| Account No.: | 403721163 | 403723477 |
| Bank: | Indian Bank | Indian Bank |
| Branch: | Jawahar Nagar | Jawahar Nagar |
| IFSC No.: | IDIB 000P132 | IDIB 000P132 |

தங்கள் இல்லத்திற்கு வரும் சேவாதாரியிடம் இப்படிவத்தினைப் பெற்றுக் கொண்டு, அதனைப் பூர்த்தி செய்து, தங்களது வங்கியின் மேலாளரிடம் சேர்ப்பித்து விட்டால் தங்களது காணிக்கை பிரதி மாதம் 5ஆம் தேதி அருள்ஜோதி அன்ன ஆலயம் / கல்வி அறக்கட்டளை வங்கி கணக்கில் சேர்ந்து விடும். பின்னர் இத்தகவலை அருள்ஜோதி அன்ன ஆலயத்திற்கு தொலைபேசி அல்லது மின்னஞ்சல் மூலமாகத் தெரிவித்து விடவேண்டும். இத்திட்டத்தில் அனைத்து அருளாளர்களும் பங்கு கொள்ள தயவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

***Email: annaalayam@gmail.com***


**அருள்ஜோதி இயற்கை மூலிகை**

எண்:33, பிரதான சாலை, கென்னடிசதுக்கம், திரு.வி.க.நகர், பெரம்பூர், சென்னை – 600011



**சுகர் கேப்சூல்ஸ், கபச்சூரணம், ராஜகல்ப கேப்சூல்ஸ், வாயு சூரணம், மூலிகை பல்பொடி ஆகிய மூலிகை பொடிகளும் கிடைக்கும்.**

தொடர்புக்கு: **ஆர்.வாசு, 9952055040**

# செய்வதற்கு எதுவுமே இல்லை !

மன இயக்கத்தின் பலவிதப் பரிமாணங்களையும் பார்த்து வருகிறோம். இப்போது நாம் இந்த ஆய்வின் இறுதி அத்தியாயத்துக்கு வந்துவிட்டோம். எல்லாவற்றுக்கும் ஆதார நிலையை பிரம்மம் அல்லது ஆன்மா என்று சாஸ்திரங்கள் விவரிக்கின்றன. பிரம்மம் என்பது உயிருள்ள ஓர் ஆதார அம்சமே தவிர, அது செயல்படும் அம்சமல்ல! பிரம்மத்தை அடுத்து வருவதுதான் ஈஸ்வரன் என்னும் செயல் அம்சம். பிரம்மம் என்பது முழு முதற்கடவுள். ஈஸ்வரன் என்பது செயல்படும் கடவுள்.

உலகத்தையும் உயிர்களையும் படைத்துக் காப்பது ஈஸ்வரன் என்னும் செயற்கடவுள். ஈஸ்வரன் என்பது பிரபஞ்ச மனம் என்றும் கூறப்படுகிறது. இந்தப் பிரபஞ்ச மனதின் ஒரு சிறிய துண்டாக... துளியாகச் செயல்படுவதுதான் நம்முடைய மனது. இப்படி, இறைவனின் ஒரு சிறிய பகுதியாகச் செயல்படும் நம் மனதின் கடைசி இலக்குதான் முக்தி என்று கூறப்படுகிறது. அந்த இலக்கை அடைய நம் மனது என்ன செய்ய வேண்டும் ? அது எதுவும் செய்யத் தேவையில்லை. மனதினுடைய இயற்கையான இயல்புநிலையே முக்தி நிலைதான்.

முக்தி என்பது உறைந்து கிடக்கும் ஒரு விநோதமான நிலையல்ல. எந்த இடத்திலும் தேங்கி நிற்காத உயிருள்ள ஓர் ஆறு போல் செயல்படுவதுதான் மனதினுடைய இயல்பு. அவ்வாறு செயல்படுவது தான் முக்தி நிலை. இது எப்போதும் நம்மிடமே உள்ளது. அதற்கு நாம் இடையூறு நாம் அனைவருமே பிறக்கும் போது கள்ளங்கபடமற்ற தன்மையில் தான்... முக்தி நிலையில் தான் இருந்தோம். குழந்தைத் தன்மை வேறு முக்தி நிலை வேறல்ல! எதையுமே பிடித்து வைக்காத இந்தக் கபடமற்ற நிலையில் இருப்பதுதான் முக்தி நிலை. அகத்தைப் பொறுத்தவரையிலும் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்ற எந்தப் பிரிவும் தேவையில்லை. அவை அனைத்தையும் மொத்தமாகச் சேர்த்து மனம் என்றே கூறி விடலாம். புறச்செயல்களுக்குதான் நெறிமுறைகள் தேவைப்படுகின்றன. செய்யவேண்டியது, செய்யக் கூடாதது என உள்ளது.

ஆகவே, அதற்கு வழிகாட்ட அறிவு, புத்தி தேவைப்படுகிறது. நாம் இப்படித்தான் செயல்பட வேண்டுமென்ற வரையறை எதுவும் அகத்துக்குக் கிடையாது. ஆகவே, அங்கே முழுச் சுதந்திரம் உள்ளது. நாம் எதை வேண்டுமானாலும் செய்துகொள்ளலாம். நாம் எதைச் செய்தாலும் அது தப்பானதல்ல. என்ன செய்தாலும் அது சரியானதே! அக்காலத்தில் ஓர் அரசனை எந்தச் சட்டத்தாலும் தண்டிக்க முடியாது. 'அரசனால் எந்தத் தவறையும் செய்ய முடியாது' என்பதாக ஒரு பழமொழி உண்டு.

நமது அகநிலை என்பது அரசனைப் போன்றது. மனம் சுதந்திரமாகச் செயல்படும்போது அது ஓர் உயிருள்ள ஆறாகவே உள்ளது.

ஆறாக ஓடும் நம் மனதில் எந்த அழுக்குகளானாலும் தங்கியிருக்க முடியாது. நம் மனதின் ஒரு பகுதி அறிவாக, புத்தியாக இருந்து செயல்படுமேயானால்... அது நம் மனோ இயக்கத்தில் குற்றம் கண்டுபிடித்துவிடும். மனோ இயக்கத்தில் குற்றம் காண்பதுதான் தவறானது. முக்திக்கு விரோதமானது. நீங்கள் ஒரு பள்ளியில் ஆசிரியராக இருக்கிறீர்கள். உங்களிடம் 30 பேர் படிக்கிறார்கள்.

வருடக் கடைசியில் அவர்களுக்குத் தேர்வு வைக்கிறீர்கள். விடைத்தாள்களைத் திருத்தி 20 மாணவர்களுக்கு பாஸ் மார்க் போடுகிறீர்கள். 10 மாணவர்களுக்கு நீங்கள் பாஸ் மார்க் கொடுக்கவில்லை. தேர்வு பெற்ற மாணவர்கள் எங்கே போவார்கள்? அவர்கள் உங்களை விட்டுவிட்டு அடுத்த வகுப்புக்குப் போய் விடுவார்கள். தேர்வு மதிப்பெண் வாங்காத மாணவர்கள் என்ன செய்வார்கள்? அடுத்த வகுப்புக்குச் செல்ல முடியாத அவர்கள் உங்கள் வகுப்பிலேயே தங்கிவிடுவார்கள். இப்படி நாம் நமது மன உணர்ச்சிகளில் குற்றம் கண்டுபிடிப்போமானால் அவை நம்முடனேயே



தங்கிவிடும்.

அவை அனைத்திற்குமே நாம் அனுமதி கொடுத்துவிடுவோம் எனில், அவை அனைத்தும் சுதந்திரமாக நம்மை விட்டு ஓடி மறைந்துவிடும். குழந்தையாக இருக்கும்போது நம்மிடம் இருந்த அந்தக் கள்ளங்கபடமற்ற தன்மை சிறுகச் சிறுக நம்முடைய அறிவினால் பாதிப்படைய ஆரம்பித்துவிட்டது.இழந்து போன குழந்தைத் தன்மைக்கு மீண்டும் வருவதுதான் முக்தி நிலை. அகத்தில் நமது அறிவுக்கு வேலை கிடையாது என்பதைப் புரிந்து கொள்வதையே ஞானம் என்கின்றனர்.

அறிவுக்குப் புறத்தில் தான் வேலை. நாம் நம்முடைய உலகச் செயல்களில் எவ்வாறு ஈடுபடவேண்டும் என நம்மை வழிநடத்துவதுதான் அறிவின் வேலை. புறச்செயல்களுக்காக உருவானதுதான் நமது அறிவு, புத்தி. அப்படி உருவான நம் அறிவு, நம் மனதையும் நிர்வாகம் செய்ய முயன்று நமது வாழ்வையே போர்க்களமாக்கி விட்டிருக்கிறது.

நாம் இழந்துவிட்ட குழந்தைத் தன்மையை மீட்டெடுக்க வந்ததுதான் ஆன்மிகம் என்பது. ஆன்மிகத்தின் அடிப்படையில் ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் மூன்று கட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஆன்மீகத்தின் ஆரம்ப கட்ட அமைப்புதான் இறை வழிபாடு, பக்தி, யோக சாதனைகள் ஆகும். நம்மை மீறிய ஒரு சக்தி இருப்பதாக நம்புவதும் அதன்மீது பக்தி செலுத்துவதும் இங்கு தேவைப்படுகிறது. அல்லது பிரபஞ்ச மனமாக இருக்கும் ஈஸ்வர அம்சத்தின் சிறிய துகளாக இருக்கும் நம்முடைய மனதை யோக சாதனைகள் மூலம் சக்தி மிகுந்ததாக மாற்றுவது என்பதும் சிலருக்குத் தேவைப்படுகிறது.

இவை அனைத்தும் உண்மையானவையே. பொய்யானவை அல்ல. இவை அனைத்துமே நமக்குத் தேவைப்படுகின்றன. நமது புறச் செயல்களை நிர்வாகம் செய்வதற்காக உருவான நமது அறிவானது, உலகப் பிரச்னைகளின் கோரப் பிடியில் சிக்கிக் கொண்டு நம்முடைய மனதையும் போராட்டக்களமாக மாற்றி விடுகிறது. உலகப் பிரச்னைகளிலிருந்து விடுபட்டு முக்தியடைய வேண்டுமென்ற உலகப் பிரச்னைகளிலிருந்து நமது மனதின் பிடிப்புகளை எல்லாம் மீட்டெடுத்து மீண்டும் அதனை அதனுடைய சுயமான நிலையில் வைக்க வேண்டியது அவசியமாகி விடுகிறது. நமது முக்தி நிலைக்கும் உலகப் பிரச்னைகளுக்கும் இடையே யான பாலமாகச் செயல்படுவதுதான் ஆன்மிகமாகும். முதல் கட்டமான பக்தி மற்றும் ஆன்மிகப் பயிற்சி முயற்சிகளை முடித்துவிட்டு விரைவில் நாம் ஆன்மிகத்தின் இரண்டாவது கட்டத்துக்கு வந்துவிட வேண்டும். நம்பிக்கையின் அடிப்படையில் பக்தி செய்வது முதற் கட்டம். பக்தியின் நோக்கம் சரணாகதி நிலைக்கு உயர்ந்து செல்வது ஆகும்.

அறிவுப் பூர்வமான சரணாகதி தான் இந்த இரண்டாவது கட்டம். சரணாகதி என்பது என்ன? நாம் எந்தப் பொறுப்புகளையும் எடுக்காது அனைத்துப் பொறுப்புகளையும் இறைவனிடம் ஒப்படைப்பதுதான் சரணாகதி ஆகும். அப்படியானால் நாம் நமது அலுவலகத்துக்குப் போகாமல் நமது வேலைகளை யெல்லாம் இறைவனிடமே ஒப்படைத்து விட வேண்டுமா? செயல்களை நாம் இறைவனிடம் ஒப்படைக்கத் தேவையில்லை.

நமது செயல்கள் சம்பந்தமான அனைத்து

மனோ இயக்கத்தையும் இறைவனிடம் ஒப்படைப்பதுதான் அறிவு பூர்வமான சரணாகதி! மனோ இயக்கம் சம்பந்தமாக நாம் எந்தப் பொறுப்புகளையும் எடுத்துக் கொள்ளாமல் இருப்பது தான் அறிவுப்பூர்வமான சரணாகதி. இறைவனுடைய பெயரைச் சொல்லி நாம் பொறுப்பு எடுக்காமலிருந்தாலும் சரி... அல்லது இறைவன் பெயரைச் சொல்லாமலேயே பொறுப்பு எடுக்காமல் இருந்தாலும் சரி... மொத்தத்தில் நம் மனோ இயக்கத்தின் பொறுப்பை நாம் எடுத்துக் கொள்ளாமலிருக்க வேண்டும். இந்த அறிவுப்பூர்வமான அணுகுமுறைக்கு வருவதுதான் ஆன்மிகத்தின் இரண்டாவது கட்டமாகும்.

ஆன்மிகப் பயிற்சி முயற்சிகளும் அதனால் ஏற்படும் பரவச நிலைகளும் அதீதமான ஆற்றல்களும் ஆரம்பகால முதலாவது கட்ட ஆன்மிகமே எனப் புரிந்துகொண்டு அவற்றுக்கு தேவையற்ற முக்கியத்துவம் கொடுப்பதைக் விட்டுவிட வேண்டும். அதிலிருந்து விடுபடுவதுதான் இரண்டாம் கட்ட ஆன்மிகமாகும். தியானப் பயிற்சிகளில் ஈடுபடும்போது பரவச நிலைகள் ஏற்படுவதுண்டு. அவை வருவதும் போவதுமாக இருக்கும். அவை நிரந்தரமாக நம்மோடு

தங்கிவிட்டால்... அதுதான் ஞான நிலை, முக்தி நிலை எனப் பலரும் எண்ணி வருகின்றனர். நானும் ஒரு காலத்தில் அப்படித்தான் எண்ணிக் கொண்டிருந்தேன். வருவதும் போவதுமாக இருந்த அந்தப் பரவசநிலை ஒரு சந்தர்ப்பத்தில் என்னை விடாப்பிடியாக பிடித்துக்கொண்டு என்னை விட்டு போக மறுத்துவிட்டது. அப்போதுதான் அதன் சுயரூபம் புலப்பட ஆரம்பித்தது.

உண்மையில் ஆன்மிகப் பரவச நிலைகள் அனைத்துக்கும் காரணம் நமது உடலில் ஏற்படும் சில ரசாயனச் சுரப்புகளே ஆகும். அது அளவுக்கு அதிகமாக ஏற்படும் போது நமது உடல் ஆரோக்கியத்தையே அழித்து விடுகின்றது. அதுபோல் அமானுஷ்யமான சில ஆற்றல்களை அடைந்து விடுகின்றனர். அதில் நாம் சிக்கிக் கொள்ளக் கூடாது என சாஸ்திரங்களும் மகான்களும் எச்சரித்தாலும்கூட, சிலர் ஆசைப்பட்டு அங்கு சென்று மாட்டிக் கொள்கின்றனர்.

இப்படித்தான் ஒருவர் முயன்றார். எதிர்காலத்தில் என்னவெல்லாம் நடக்கும் என்பதை முன்கூட்டியே தெரிந்துகொள்ள வேண்டும் என முயன்றார். பன்னிரண்டு வருட முயற்சிக்குப் பிறகு வெற்றி கண்டார். அவர் இருப்பது அமெரிக்காவில். அவர் சென்னையிலிருக்கும் தனது சகோதரருக்கு போன் செய்து பேசினார். என்ன பேசியிருப்பார்? "எனது முயற்சி வெற்றி பெற்றுவிட்டது.

ஆனால், நான் தெரியாமல் சிக்கிக் கொண்டேன். நாளைக்கு நடக்கப் போகும் பிரச்னைகளெல்லாம் முன்கூட்டியே தெரிவதால் நிம்மதியே இல்லாமல் போய் விட்டது. தயவு செய்து யாரும் இத்தகைய முயற்சிகளில் ஈடுபட்டு விடாதீர்கள்..." என புலம்ப ஆரம்பித்துவிட்டார். கர்மாவை நம்பலாம். அது தர்ம நியாயங்களை நம்புவதைப் போன்றது. நமது உழைப்பை நம்புவதைப் போன்றது.

ஆனால், இத்தகைய ஆற்றல்களை நம்புவது என்பது சூதாட்டத்தை நம்புவதைப் போன்றது. விரைவில் அவற்றிலிருந்து விடுபட்டுவிட வேண்டும். அவற்றையும் அறிவுப்பூர்வமாக அணுகுவதுதான் ஆன்மிகத்தின் இரண்டாம் கட்டமாகும். இதன்மூலம் மன இயக்கத்தைச் சுதந்திரமாக விட்டுவிடக் கற்றுக் கொள்கிறோம். புறச்செயல்கள் யாவற்றையும் தர்ம நியாயங்களுக்கு உட்பட்டு அக்கறையுடன் செய்வதற்கும் கற்றுக் கொள்கிறோம்.

அறிவுப்பூர்வமான இந்தப் புரிதல் இரண்டாம் கட்ட ஆன்மிகமாகும். அடுத்து வருவதுதான் மூன்றாம் கட்டமான இறுதி நிலை ஆன்மிகம். இங்கு நாமாக எதுவும் செய்யத் தேவையில்லை. நாம் புரிந்துகொண்டவை அனைத்தும் தாமாகச் செயல்பட்டு விடும். கயிறு என்று எண்ணி பாம்பு ஒன்றைக் கையில் எடுத்து விடுகிறோம். அது பாம்பு என்று புரிந்துகொண்ட மாத்திரத்தில் அதனை வீசி எறிந்துவிடும் செயல் தாமாகவே நிகழ்ந்து விடுகிறது. இப்படி நாம் அகத்தில் அக உணர்ச்சிகளைப் பொறுத்த வரையிலும் 'செய்வதற்கு எதுவுமே இல்லை ' என்று அது சம்பந்தமாக நாம் எந்தப் பொறுப்பையும் எடுக்காமல் இருந்து விடுகிறோம்.

இந்த மூன்றாம் கட்ட நிலை தாமாகவே செயல்படுகிறது. அந்நிலையில் நம் மனோ இயக்கம் சுதந்திரப் பிரவாகமாக ஓர் உயிருள்ள ஆற்றைப் போல் கள்ளங்கபடமற்ற குழந்தையைப் போல் இயங்க ஆரம்பிக்கின்றது. புற நிகழ்வுகளைப் பொறுத்த அளவில் பொறுப்புள்ள ஓர் அறிஞனாக இருந்து செயல்படுகின்றோம். அகத்தைப் பொறுத்த அளவில் முக்தனாகவும் புறத்தைப் பொறுத்த அளவில் ஞானியாகவும் வாழ்வாங்கு வாழ்ந்திடுவோமாக!

அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி




**திருஅருட்பாவில் உள்ள ஆறுகால பூஜைகளின் தொகுப்பு மொத்தம் 600 பாடல்கள் கொண்ட சி.டி. வெளியீடு**

**சி.டி.தேவைக்கு**

**தொடர்புகொள்ள:**

**கே.ஆர்.யூகேஷ்குமார்**

**9962757343**

# அருள்ஜோதி அன்ன ஆலயத்தில் சன்மார்க்கச் சொற்பொழிவுகள்

1.இம்மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை சொற்பொழிவு நிகழ்த்துபவர் தயவுத் திரு.**நல்லூர் சரவணன்** ஐயா.

2.மாதத்தின் மூன்றாம் ஞாயிற்றுக் கிழமைகளில் தொடர் சொற்பொழிவு நிகழ்த்துபவர்: தயவுத்திரு.**மு.பா.பாபு** ஐயா.

3.மாதத்தின் நான்காம் ஞாயிற்றுக்கிழமைகளில்தொடர் சொற்பொழி நிகழ்த்துபவர்: தயவுத்திரு.**உமாபதி** ஐயா

ஆன்மகேல அன்பர்கள் அனைவரும் கலந்து கொண்டு ஆன்ம இலாபம் பெற்றுய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

சமயம் கடந்த

# சன்மார்க்கம்

## சித்திநெறியில் உளவியல் நிலை

அருளரசை அருட்குருவை அருட்பெருஞ் சோதியைஎன்
அம்மையைஎன் அப்பனைஎன் ஆண்டவனை அமுதைத்
தெருளுறும்என் உயிரைஎன்றன் உயிர்க்குயிரை எல்லாம்
செய்யவல்ல தனித்தலைமைச் சித்தசிகா மணியை
மருவுபெரு வாழ்வைஎல்லா வாழ்வும் எனக் களித்த
வாழ்முதலை மருந்தினைமா மணியை என் கண் மணியைக்
கருணைநடம் புரிகின்ற கனகசபா பதியைக்
கண்டுகொண்டேன் கனிந்துகொண்டேன் கலந்துகொண்டேன் களித்தே.
(4004)



சித்தர்கள் மனித ஆழ்நிலையிலிருந்து அருளார்வத்தை ஏற்படுத்தி இறையுறவிற்காக ஏங்கும் அகவுந்தவாவினால்இயக்கப்படுகின்றனர். இது முழுமையாகத் தன்னை இறைவனுக்கு அர்ப்பணமாக்கும் சரணாகதி அனுபவமாகும். இந்த அருளுணர்வு இறைநிலைக்குத் தகுந்தவாறு அடியவரை உயர்த்தி, அவரை முழுமையான இயல்மாற்றம் அடையச் செய்கிறது. இந்த அனுபவத்தை அடிகளார் கலந்து புணர்ந்திருக்கும் அருள்நிலை என்று அனுபோக நிலையம் என்ற பகுதியில் உள்ள பாடல்களில் விளக்குகிறார்.

இனிப்பிரிந் திறையும் இருக்கலேன் பிரிவை
எண்ணினும் ஐயயோ மயங்கிப்
பனிப்பில் என் உடம்பும் உயிரும் உள் உணர்வும்
பரதவிப் பதை அறிந் திலையோ
தனிப்படு ஞான வெளியிலே இன்பத்
தனிநடம் புரிதனித் தலைவா
கனிப்பயன் தருதற் கிதுதகு தருணம்
கலந்தருள் கலந்தருள் எனையே.
(3822)

துன்பெலாம் தவிர்க்கும் திருச்சிற்றம் பலத்தே
சோதியுட் சோதியே அழியா
இன்பெலாம் அளிக்கும் இறைவனே என்னை
ஈன்றநல் தந்தையே தாயே
அன்பெலாம் ஆகி நிறைந்ததோர் நிறைவே
அண்ணலே இனிப்பிரி வாற்றேன்
பொன்பதந் தருதற் கிதுதகு தருணம்
புணர்ந்தருள் புணர்ந்தருள் எனையே.

(3827)

இறைவனில் புணர்ந்திருக்கின்ற அருட்காதல் உணர்வு, எல்லாவற்றையும் இறைவனில் ஆழ்த்துகின்ற அன்பின் ஆற்றலாகும். இந்த அன்பு காதலரின் எல்லாவிதமான தேவைகளையும், விருப்பங்களையும், ஏக்கங்களையும் நிறைவு செய்கிறது.

நான் பசித்த போதெல்லாம் தான்பசித்தார் ஆகி
நல்லதிரு அமுதளித்தே அல்லல் பசி தவிர்த்தே
ஊன்பதித்த என்னுடைய உளத்தேதம் முடைய
உபயபதம் பதித்தருளி அபயம் எனக் களித்தார்
வான்பதிக்கும் கிடைப்பரியார் சிற்சபையில் நடிக்கும்
மணவாளர் எனைப்புணர்ந்த புறப்புணர்ச்சித் தருணம்
தான்பதித்த பொன்வடிவம் தனை அடைந்து களித்தேன்
சாற்றும் அகப் புணர்ச்சியின்ஆம் ஏற்றம் உரைப் பதுவே.

(5807)

சித்தத்தைத் தெளிவாக்கி அருள்ஞான நிறைவில் அனுபவமாகும் இந்த அகப்புணர்ச்சி ஒருவரை ஒருவர் அன்பினால் நிறைத்து, ஒருவர் ஒருவரில் ஆட்கொள்ளப்பட்டிருக்கும் நிலையாகும். மேலும் இது அருட்பேரிரக்க உணர்வுடன் ஒருவரை ஒருவர் உரிமை கொண்டிருக்கும் நிலை என்றும் கூறலாம். இதனை அடிகளார் பின்வருமாறு கூறுகிறார்:

"என்னுளம்நீ கலந்துகொண்டாய் உன்னுளம் நான் கலந்தேன்
என்செயல் உன் செயல் உன்றன் இருஞ்செயல் என் செயலே..."

(3012)

# வள்ளலார் பொன்மொழிகள்



1. நல்லோர் மனதை நடுங்க செய்யாதே.
2. தானம் கொடுப்போரைத் தடுத்து நிறுத்தாதே.
3. மனமொத்த நட்புக்கு வஞ் சகம் செய்யாதே.
4. ஏழைகள் வயிறு எரியச் செய்யாதே.
5. பொருளை இச்சித்து பொய் சொல்லாதே.
6. பசித்தோர் முகத்தைப் பாராதிராதே.
7. இரப்போர்க்கு பிச்சை இல்லை என்னாதே.
8. குருவை வணங்கக் கூசி நிற்காதே.
9. வெயிலுக்கு ஒதுங்கும் விருட்சம் அழிக்காதே
10. தந்தை தாய் மொழியைத் தள்ளி நடக்காதே.

# கல்யாண மாலை



| | | |
|---|---|---|
| பெயர் | : | என்,அன்புராஜ் |
| பிறந்த தேதி | : | 14.01.1991 |
| வயது | : | 29 |
| உயரம் | : | 6.1அடி |
| தந்தை | : | நாகராஜன் |
| தாய் | : | அஜந்தா நாகராஜன் |
| சகோதரி | : | அன்புமலர் (திருமணமானவர்) |
| ஊர் | : | நாகப்பட்டினம் |
| வேலை | : | Information Analyst<br>Mmodal Pvt.Ltd.,<br>Balagalore. |
| வருமானம் | : | வருடத்திற்கு 15 இலட்சம் |

எதிர்ப்பார்ப்பு : சன்மார்க்க குடும்பம்/சைவக்குடும்பம் மகணமகன் உயரத்திற்கு ஏற்ப சற்று உயரமான மணமகள் தேவை.

**தொடர்பு எண்கள். 94434 56245/ 9344998170**

---

| | | |
|---|---|---|
| Name | : | K.GANES |
| Father Names | : | S.Kandavelu (Late) |
| Mother Names | : | K.Ramani Bai |
| Qualifacation | : | MBA |
| Age | : | 18/09/1977 |
| Occupation | : | Bussiness (Alien Internet Browsing Center) |
| Income | : | Rs.30000/- |
| House Rent | : | Rs.30000/- |
| Residential Adderss (Own House) | : | 4/33 Vaikkakaran Steet<br>Purasawalkam Chennai-600 007<br>Kulandaivel Street, 2st Floor |
| Caste | : | Agamudi Mudaliyar |
| Contact No | : | 6380451898, 8072301639 |



# தொண்டு செய்பவர்களின் அனுபவங்கள்

திருமதி ரமணி நேருநகர், மாதவரம், சென்னை மாதவரத்தில் வசித்து வரும் இவர்கள் குடும்பம் பல வருடமாக அருள்ஜோதி அன்ன ஆலயத்திற்கு தொண்டுகள் சிறப்பாக செய்துவருகின்றனர். மேலும் பலரையும் தொண்டு செய்வதற்கு ஈடுபடுத்தியுள்ளனர். இவர்கள் தொண்டு செய்வதினால் ஆரோக்கியமாக இருப்பதாக நிறைவடைகின்றனர். மேலும் இவர்களின் தொண்டு சிறக்க எல்லாம் வல்ல அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் ஆசீர்வதிப்பார் இவர்களும் இவர்களின் தொண்டும்

வாழ்க ! வாழ்க !! வளர்க !!!

வாழ்க வளமுடன் ! மகிழ்ந்து அருள் துணையால் வாழ்க !


---

## ஓவியங்கள்:

5 முதல் 15 வயது வரை உள்ள மாணவ–மாணவிகளிடமிருந்து எனக்கு பிடித்த சைவ பிராணிகள் என்ற தலைப்பில் ஓவியங்கள் வரவேற்கப்படுகின்றன.

## இளைஞர் கட்டுரைகள்

சன்மார்க்க அனுபவங்களை பகிர்ந்து கொள்ளும் இளைஞர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு. தங்களின் சன்மார்க்க கட்டுரைகள், மற்றும் கவிதைகள் அருள்ஜோதி மாத இதழ் புத்தகத்தில் புகைப் படத்துடன் பிரசுரிக்கப்படும்.



**அருள் ஜோதி ஆன்-லைன் யூ.டிப் டி.வி. நிகழ்ச்சிகளின் சன் மார்க்கிகளின் கருத்துக்கள் ...**



#vallalar #Aruljothi
ஆன்மா என்றால் என்ன/பயம் எந்த நிலையில் பூஜ்யம் ஆகும்/இப்போது ஐந்தொழிலை செய்வது யார்



#vallalar #Aruljothi
வள்ளலாரும் திருமந்திரமும்/திருமூலர் ஆய்விருக்கை முனைவர் திருமதி.மகாலட்சுமி அம்மா




#vallalar #Aruljothi
பசித்திரு தனித்திரு விழித்திரு/Thiru.Thandapani Ayya



#vallalar #Aruljothi
இறைவனை தன்னுள் வணங்குங்கள்/திரு. இரங்கநாதன் ஐயா



#vallalar #Aruljothi
இல்லறமல்லது நல்லறமன்று/சுத்த சன்மார்க்கம்/திரு.ரவிக்குமார் ஐயா/Part-1

**அருள்ஜோதி தொலைக்காட்சியில் ஒளிப்பரப்பான நிகழ்ச்சிகளை Internet UTube மூலம் காணலாம்.**


**ARULJOTHI TELEVISION FOUNDATION**

No.:33, KENNEDY SQUARE MAIN ROAD,
TVK NAGAR, PERAMBUR,
CHENNAI – 600011
**CONTACT:9003034056, 044-25582243**
EMAIL: aruljothitelevision@gmail.com
WEB: aruljothitv.com


**BANK DETAILS**

**ARULJOTHI TELEVISION FOUNDATION**
**A/C.No.:35562632395**
**STATE BANK OF INDIA**
**THIRU.VI.KA.NAGAR BRANCH**
**IFSC CODE: SBIN0016283**


**Published by: S. Dhanalakshmi ,**

**Published from New No.:33/Old No:17, Main Road, Kennady Square, Thiru.Vi.Ka.Nagar, Perambur, Chennai – 11 Editor: Thavathirumati. Dhanalakshmi Ammaiyaar Printed at bharanipress, No77, Venkatadhiri street, kosapet, Chennai - 600012**

ARULJOTHI Tamil Monthly Magazine
Date of Publication: 10th of Every month
அஞ்சல் நாள் : ஏப்ரல் 2020
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPER FOR INDIA No.70781/ 99
10.04.2020

# அன்பார்ந்த அரிசித் தொண்டு அருளாளர்கள் கவனத்திற்கு!

தாங்கள் இதுகாறும் மாதாமாதம் அளித்துவரும் காணிக்கையின் மூலம், பல்வேறு மக்களின் பசிப்பிணியினைப் போக்குவதற்கு பல்வேறு பணிகள் செயலாக்கப்பட்டுள்ளன.

பிரதி மாதம் குறிப்பிட்ட தினங்களில் ஆலய சேவாதாரிகள் தங்களது இல்லத்திற்கு நேரிடையாக வந்து, தாங்கள் அளிக்கும் காணிக்கையினை பெற்று செல்கின்றனர். இருந்த போதிலும் சிற்சில சமயங்களில், சில அருளாளர்களின் இல்லத்திற்கு இயலவில்லை.

இதனால், அருளாளர்கள் தங்களது வங்கி கணக்கில் NACH திட்டத்தின் மூலம் தங்களது காணிக்கையினை செலுத்தி விடலாம். இத்திட்டம் குறித்து, விரிவாக, ஆலய சேவாதாரிகள் தங்களிடம் தெரிவிப்பார்கள்.

மேலும், இதுவரை ஆயிரத்து இருநூற்று ஐம்பத்து மூன்று (1253) அரிசித் தொண்டு அருளாளர்கள் இத்திட்டத்தின் மூலம் தங்களது காணிக்கையினை செலுத்தி வருகின்றனர்.

தாங்களும் தங்களது காணிக்கையினை வங்கிமூலம் செலுத்தும் திட்டத்தில் சேர்ந்து பயன் பெறுமாறு, தயவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

